சத்தியமங்கலம் வட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ள கோம்பு பள்ள திட்டம்

37* வினா எண். 17929—திரு. ஆர். ரங்கசாமி ; மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வட்டத்தில் பொதுப் பணித்துறையின் மூலம் கோம்பு பள்ளத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு என்ன?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இத்திட்டம் தற்போது விரிவான ஆய்விலுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ. 112 இலட்சமாகும்.

(இ) இத்திட்டத்தினால் 817 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் ஆய்வுகள் கடந்த 4, 5 ஆண்டுகளாக நடந்து வருகின்றன. இது எப்போது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சில ஆண்டுகளாக ஆய்விலே இருப்பது உண்மைதான். ஆனால் இந்தத் திட்டத்திலே காணப்பட்ட சில தொழில் நுணுக்க குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்காக திட்டமதிப்பீடுகள் தலஅதிகாரிகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளன. மேற்கூறிய குறைபாடுகள் தல அதிகாரிகளால் சரி செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே தல அதிகாரிகளுடைய அறிக்கைக்குப் பிறகு உரிய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு, ஆர். ரங்கசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத்திட்டம்ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது நிலை திட்டத்திலே சேர்க்கப்படவுள்ளது. அதற்குள்ளாக இது எடுக்கப்பட்டு செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வு நிலையில் இருப்பதால் ஆய்வு முடிவுகள் எப்படி வரும் என்று தெரியாமல் இருப்பதால் ஒருக்கால் முடிவுகள் பாதகமாக இருக்குமேயானால் ஆறாவது திட்டத்திலே சேர்க்க முடியாமல் கூட போகும். ஆகவே அப்படிப்பட்ட வாக்குறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வினா எண் 38க்கான விடை திருத்தப்பட வேண்டியிருப்பதால் இதை பின்னர் எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வினா 38 தள்ளிவைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தோல் தயாரிப்புக்கான சேவை நிலையங்கள் நிறுவும் திட்டம்

39*வினா எண். 12349 திரு. இரா. தாமரைக்கனி: திரு. பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தோல் தயாரிப்புக்கு சேவை நிலையங்கள் நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு நிறுவப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ). வாணியம்பாடி, ராணிப்பேட்டை, பேரணாம்பட்டு, திண்டுக்கல் ஆகிய இடங்களில்தோல் பூர்த்தி செய்யும் சேவை தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாணியம்பாடியிலுள்ள சங்கம் இயங்குகிறது. மற்ற மூன்று இடங்களிலுள்ள சங்கங்கள் இயந்திரங்கள் வரப்பெற்றவுடன் செயல்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வாணியம்பாடி, இராணிப்பேட்டை பேரணாம்பட்டு, திண்டுக்கல் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தோல பூர்த்தி செய்யும் சேவை தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு திட்டச் செலவு ஆகியுள்ளது? பாரத வர்த்தக கழகத்தின் தோல் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி கிடைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில் இந்தச் சங்கத்தின் மொத்த திட்டச் செலவு ரூபாய் 99.50 லட்சமாகும். பேரணாம்பட்டு சங்கத்தின் மொத்த திட்டச் செலவு ரூ. 94லட்சம். திண்டுக்கல் சங்கத்தின் மொத்த திட்டச் செலவு ரூபாய் 97.80 லட்சமாகும். இந்த ஒவ்வொரு பகுதிக்கும் பாரத வர்த்தக கழகத்தின் மேம்பாட்டு நிதியிலிருந்து தலா 50 லட்சம் ரூபாய் இயந்திரங்கள் மானியமாக வெளி நாட்டிலிருந்து தருவிப்பதற்கு உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.